DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ராமகிருஷ்ணன் |
| Father Name | : | சுப்பிரமணியன் |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2025.

(3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது பழங்காநத்தம் அக்ரினி அப்பார்ட்மெண்ட்ஸ்சில் குடியிருக்கிறேன். நான் குருதேவா Imports and Exports நிறுவனம் வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 21.11.2015ம் தேதி புதூரில் இருந்து முடி வெட்டும் கடைக்கு சென்றுவிட்டு, வெளியில் இரவு சுமார் 10 மணியளவில் அந்த கடையின் வாசலிலிருந்து எனது காருக்குள் ஏறும் போது, ஆராக்கிய பிரவீன் மற்றும் அவருடன் இருந்த மற்றொரு நபரும் சேர்ந்து, ஆராக்கிய பிரவீன் ஒரு பெரிய வாளை வைத்து என்னை வயிற்றில் மற்றும் இடது கை புஜத்திற்கு கீழ் மற்றும் இடது நெஞ்சு பகுதி மற்றும் தொப்புளுக்கு கீழே உள்ள வயிற்று பகுதி ஆகிய இடங்களில் மேற்படி பெரிய வாளை வைத்து குத்தி காயத்தை ஏற்படுத்தினார். அவ்வாறு தாக்க துவங்கியவுடன் இரண்டு

கால்கள் வெளியே இருந்த நிலையில் நான் காருக்குள் படுத்துவிட்டேன். அவ்வாறு குத்தியதை நான் இரண்டு கைகளால் பிடித்ததில் என்னுடைய இரண்டு கைகளிலும் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அதன்பிறகு நான் பாதுகாப்பிற்காக இரண்டு கால்களையும் உதறும் போது, இடது காலின் பின்பக்க பகுதியில் (**ஆடுதசை பகுதி (calf muscles)**) இரண்டு இடங்களில் ஆரோக்கிய பிரவீன் வெட்டிவிட்டார். பின்னர் என்னுடைய கழுத்தின் இடதுபக்க தாடைக்கு கீழ் மேற்படி பெரிய வாளை வைத்து குத்தினார். நீங்களெல்லாம் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள், உன்னை முடித்தால் தான் சரிவரும், உன்னை முடித்துவிட்டு தான் நான் செல்வேன் என்று கூறிவிட்டு ஆரோக்கிய பிரவீன் அங்கிருந்து சென்றுவிட்டார். அதன் பிறகு எனக்கு முடி திருத்தம் செய்த நபரும் மற்றும் சலூன் ஓனருமான அர்ஜுன், மேலும் அங்கு முடி திருத்தம் செய்வதற்கு வந்திருந்த வாடிக்கையாளர் அன்பரசு ஆகியோர்கள் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார்கள். எனக்கு ரொம்பவும் முடியாததால் என்னை இருசக்கர வாகனத்தில் கொண்டு செல்லுமாறு நான் சொன்னதால், அன்பரசு என்பவர் என்னை இருசக்கர வாகனத்தில் வைத்து மதுரை கே.புதூரில் உள்ள தேவதாஸ் மருத்துவமனையில் கொண்டு சேர்த்தார். அங்கு முதலுதவி செய்த பிறகு என்னை மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு அங்கு சிகிச்சை அளித்தார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்தினால் இடது கை ஐந்து விரல்கள் மற்றும் வலது கையில் மோதிர விரல் மற்றும் சுண்டு விரல் சரியாக செயல்படவில்லை. நான் அப்போலோ மருத்துவமனையில் ஒரு மாதம் சிகிச்சை எடுத்துவிட்டு கோயம்புத்தூரிலுள்ள கங்கா மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு சுமார் 18 நாட்கள்

சிகிச்சை பெற்றேன். நான் மதுரை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது புதூர் காவல் நிலையத்திலிருந்து காவல் ஆய்வாளர் வந்து நடந்த சம்பவம் குறித்து கேட்டார். நான் சொல்ல சொல்ல அந்த விவரத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்துகொண்டார். நான் அதனை படித்து பார்த்து சரி என தெரிந்துகொண்டு அதில் கைரேகை செய்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான், அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.